# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2251/30 - 2021 ඔක්තෝබර් මස 26 වැනි අඟහරුවාදා - 2021.10.26

*2251/30 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

*ச. அ. இல.* : PS/CSA/00/1/14/34

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அதியுத்தமராம் கோட்டாபய ராஜபக்ஷ அவர்களினால்**

(முத்திரை)

**கோட்டாபய ராஜபக்ஷ**

**சனாதிபதியின் பணிப்புரை**

இலங்கை அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையினால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் வண்ணம் ஒரே நாடு, ஒரே சட்டம் என்பதற்கான சனாதிபதி செயலணியொன்றைத் தாபித்தல்.

1. வணக்கத்துக்குரிய கலகொடஅத்தே ஞானசார தேரர் அவர்கள்
2. பேராசிரியர் தயானந்த பண்டார அவர்கள்
3. பேராசிரியர் சாந்திநந்தன விஜேசிங்க அவர்கள்
4. பேராசிரியர் சுமேத சிறிவர்த்தன அவர்கள்
5. திரு. என். ஜி. சுஜீவ பண்டிதரத்ன
6. சட்டத்தரணி இரேஷ் செனெவிரத்ன அவர்கள்
7. சட்டத்தரணி சஞ்ஜய மாரம்பே அவர்கள்
8. திரு. எரந்த நவரத்ன
9. திரு. பாணி வேவல
10. மௌலவி மொஹொமட் அவர்கள்
    காலி உலமா சபை
11. விரிவுரையாளர் மொஹொமட் இந்திகாப் அவர்கள்
12. திரு. கலீல் ரஹூமான்
13. திரு. அஸீஸ் நிசார்தீன்

ஆகியோருக்கு

வாழ்த்துக்கள்!


1A - G 34909 — 370 (2021/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நீதி தீர்த்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதலும் சட்டத்தின் பாதுகாப்பும் சர்வசாதாரணமாக வேண்டுமென்பதைக் கவனத்தில்கொண்டும்,

அதில், இனம், மதம், குலம் அல்லது வேறேதேனும் காரணியொன்றின்பேரில் எந்தவொரு நபரும் சட்டத்தின் பாகுபாட்டுக்கு அல்லது விசேட கவனத்துக்கு ஆளாகக்கூடாது என்பது அடிப்படை உரிமைகளின்கீழ் காட்டுப்பட்டுள்ளதாலும்,

இலங்கையினுள் ஒரே நாடு, ஒரே சட்டம் எனும் எண்ணக்கருவைச் செயற்படுத்துதலானது தேசிய மற்றும் சர்வதேசரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித விழுமியங்களை அடையும் திறமுறையாகத் தென்படுவதாலும்,

அனைத்துப் பிரசைகளும் சட்டத்தின்முன் சமமானவர்கள் எனக் கருதப்படுவதை மேலும் உறுதிப்படுத்த வேண்டியதாலும்,

1. வணக்கத்துக்குரிய கலகொடஅத்தே ஞானசார தேரர் அவர்கள்
2. பேராசிரியர் தயானந்த பண்டார அவர்கள்
3. பேராசிரியர் சாந்திநந்தன விஜேசிங்க அவர்கள்
4. பேராசிரியர் சுமேத சிறிவர்த்தன அவர்கள்
5. திரு. ஜி. சுஜீவ பண்டிதரத்ன
6. சட்டத்தரணி இரேஷ் செனெவிரத்ன அவர்கள்
7. சட்டத்தரணி சஞ்ஜய மாரம்பே அவர்கள்
8. திரு. எரந்த நவரத்ன
9. திரு. பாணி வேவல
10. மௌலவி மொஹொமட் அவர்கள்
    காலி உலமா சபை
11. விரிவுரையாளர் மொஹொமட் இந்திகாப் அவர்கள்
12. திரு. கலீல் ரஹூமான்
13. திரு. அஸீஸ் நிசார்தீன்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி பதவியை வகிக்கும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், தங்களின் விவேகம், திறமை மற்றும் பற்றுறுதி என்பவற்றின்மீது மிகுந்த பக்தியும் நம்பிக்கையும் கொண்டு, மேற்சொல்லப்பட்ட உங்களை ஒரே நாடு, ஒரே சட்டம் என்பதற்கான சனாதிபதி செயலணியின் உறுப்பினர்களாக கீழக்குறிப்பிடப்பட்டுள்ள பணிகளைச் செயற்படுத்துவதற்காக இத்தால் நியமிக்கின்றேன்.

1. இலங்கையினுள் ஒரே நாடு, ஒரே சட்டம் என்பதைச் செயற்படுத்துதல் தொடர்பாகக் கற்றாராய்ந்து அதற்காகச் சட்டவரைவொன்றைத் தயாரித்தல்.

2. நீதி அமைச்சினால் இதுவரை இதற்குரியதாக தயாரிக்கப்பட்டுள்ள சட்ட வரைவுகள் மற்றும் திருத்தங்களைக் கற்றாராய்ந்து அவற்றின் பொருத்தம் மற்றும் தகுந்த திருத்தங்கள் இருப்பின் அதற்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தலும் ஏற்றவாறு உரிய வரைவில் உள்ளடக்குதல்.

மேலும், வணக்கத்துக்குரிய கலகொடஅத்தே ஞானசார தேரர் அவர்களை, சொல்லப்பட்ட செயலணியின் தலைவராக இத்தால் நியமிக்கின்றேன்.

மேலும், சனாதிபதியின் சிரேட்ட உதவிச் செயலாளர் ஜீவந்தி சேனாநாயக்க அவர்களை மேற்போந்த செயலணியின் செயலாளராக நியமிக்கின்றேன்.

மேலும் இத்தால் ஒப்படைக்கப்படும் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையானவாறு விடயங்களை விசாரிப்பதற்கும் ஆலோசனைகளை வழங்குவதற்கும் மேற்போந்த சனாதிபதி செயலணிக்கு இத்தால் அதிகாரமளிக்கின்றேன்.

மேலும், சொல்லப்பட்ட செயலணியின் உறுப்பினர்களாகிய நீங்கள் குறைந்தபட்சம் மாதத்துக்கொருமுறை எனக்கு அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும், இறுதி அறிக்கையை 2022 பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி அல்லது அதற்குமுன்னர் சமர்ப்பிப்பதற்கும் இத்தால் விதிக்கின்றேன்.

மேலும், இச்செயலணியினால் ஆலோசனை வழங்கக்கூடிய அல்லது சேவைகளை வழங்குவதற்காக உதவியினைக் கோரக்கூடிய சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் ஏனைய நபர்களும் குறித்த செயற்பாடு தொடர்பில் அவற்றைப் பின்பற்றி அத்தகைய ஆலோசனைகளுக்கமையச் செயற்பட வேண்டுமெனவும் வழங்கக்கூடிய சகல உதவிகளையும் வழங்க வேண்டுமென்றும் வழங்கக்கூடிய அத்தகைய சகல தகவல்களை வழங்க வேண்டுமென்றும் நான் இத்தால் சகல அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய நபர்களுக்கும் பணிப்புரை வழங்குகின்றேன்.

மேலும், யாதேனும் அரச ஊழியர் அல்லது யாதேனும் அமைச்சின், அரச திணைக்களமொன்றின், அரச கூட்டுத்தாபனமொன்றின் அல்லது ஏனைய அவ்வாறான நிறுவனமொன்றின் உத்தியோகத்தர் ஒருவர் மேற்குறிப்பிட்ட செயலணியினால் ஒப்படைக்கப்படும் கடமைகளை நிறைவேற்றத் தாமதிக்கும் அல்லது தவறும் சந்தர்ப்பங்கள் எல்லாவற்றையும் என்னிடம் அறிக்கையிடுமாறு மேற்குறிப்பிட்ட செயலணிக்கு நான் இத்தால் கட்டளையிட்டுப் பணிப்புரை விடுக்கின்றேன்.

இரண்டாயிரத்து இருபத்தோராம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதியாகிய இன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகிரங்க இலச்சினையின் கீழ் கொழும்பில் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.